DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C.No.112/2015

PROSECUTION WITNESS P.W.15

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரமேஷ் | தகப்பனார் பெயர் | பழனிச்சாமி |
| கிராமம் | | ஊர் | |
| தொழில் | காவல் துணை கண்காணிப்பாளர் (ஓய்வு) | வயது | |

**(2,3,5 எதிரிகள் ஆஜர். 4 ம் எதிரி ஆஜர் இல்லை. 4 ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு – 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 13.10.2025.

**C.M.P. No. 10052/2024 மனு கடந்த 27.08.2024– ம் தேதி அனுமதிக்கப்பட்டதன் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) புகார் 17.07.2013 ம் தேதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே தேதியில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் 13.07.2013 ம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளேன் என்றால் 17.07.2013 என்பது தான் சரியான தேதி ஆகும். அ.சா.1 தனது முதல் விசாரணையில் ஆஜர் எதிரிகளை தெரியாது என கூறியுள்ளார் என்றாலும், வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என கூறியுள்ளார் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சாட்சிகள் அ.சா.2, அ.சா.7 முதல் அ.சா.9 மற்றும் அ.சா.11, அ.சா.12 ஆகியோரும் எதிரிகளை தெரியாது என்றும், வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும் தங்கள் முதல்விசாரணையில் சாட்சியமளித்துள்ளார்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. 1 முதல் 4 எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலம் கையால் எழுதப்பட்டதா, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டதா என்றால் லேப்டாப் மூலம் தட்டச்சு செய்யப்பட்டது. பிரிண்ட் அதே இடத்தில் எடுத்தோமா என்றால் காவல்நிலையத்தில் வைத்து எடுக்கப்பட்டு அந்த இடத்திற்கு எடுத்து வரப்பட்டது. நான் சொன்னது போல் தட்டச்சு செய்யப்படவில்லை என்றாலும், பிரிண்ட் எடுத்து எதிரிகளிடம் கையொப்பம் பெறப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகள் கையில் வைத்திருந்ததாக சொல்லப்படும் சாட்சி பொருட்கள் கைப்பற்றியதாக சொல்வது பொய் என்றாலும், எதிரிகளிடமிருந்து எந்த பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரிகள் கைது செய்யப்பட்டிருந்தால் பொது மக்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டிருக்கும் என்றாலும், மேலும் பொது மக்கள் சாட்சியாக கையொப்பம் செய்திருப்பார்கள் என்றாலும் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக

VANJI NATHAN R Digitally signed by VANJI NATHAN R Date: 2025.10.13 18:08:18 +0530

சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எங்களிடம் இருந்த இருப்பு சாட்சிகளை வைத்து காவல்நிலையத்தில் பின்னிட்டு தயார் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. நான் வழக்கை சரிவர விசாரணை செய்யாததால் தான் சாட்சிகள் முன்னுக்கு பின் முரணாக சாட்சியமளித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. புள்ளி விவரக் கணக்கிற்காக எதிரிகள் மீது வழக்கு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதி, நேரம், இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2025.10.13 18:08:24 +0530

Judicial Magistrate No.I,

Erode.